INDIAN JOURNAL OF TAMIL | Volume 2 | Issue 1

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# தமிழ்க் கடவுள் முருகனின் இறைநெறிக் கொள்கைகள்

**வீ. சுரேந்திரன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி, மதுரை-625002, தமிழ்நாடு, இந்தியா.

# The Theory of Tamil God Murugan

**V. Surendran** [a, *]

[a] Madurai Kamaraj University College, Alagarkoil Road, Madurai-625002, Tamil Nadu, India.
*Corresponding Author Email: surendranmk@gmail.com

(Received: 20th December 2020; Accepted: 05th Febuary 2021)
DOI: http://doi.org/10.34256/ijot2113

**Abstract:** Murugu means beauty. If the beauty means Lord Muruga, he is the lord. Since Lord Muruga is the god of Tamils, murugan is called tamil god. Let us look at the principles of the great Tamil god Murugan. The principle of Lord Muruga is morality, charity should remain in this world. In this article, one can learn that to attain salvation, one should worship Lord Muruga and follow his righteous ness and attain salvation.

**Key Words:** Murugu, Lord Murugan, Bhakti literature, Worship, Tamil god

## முன்னுரை

தமிழ் என்றால் முருகன் என்றே பொருள்படும். அழகு என்றாலும் முருகன் என்றே பொருள்படும். ‘முருகன் குன்றுதோறும் இருப்பவன். “குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான்” என்று சான்றோர் பெருமக்கள் கூறுவர். இதன் காரணமாக முருகன் குன்றுதோறும் அமர்ந்திருப்பவன். முருகனின் புகழ் சிறப்பு வாய்ந்ததாக இருக்கின்றது. முருகன் அசுரர்களை அழித்து, தன்னுடைய வீரத்தினை வெளிப்படுத்தினார். முருகனின் பெருமைகளை நக்கீரர், திருமுருகாற்றுப்படையின் வழி விளக்குகின்றார். திருமுருகாற்றுப்படையில் மகளிரின் அழகு, வேலனின் (முருகனின்) பெருமை, பன்னிருகைகள் கொண்ட ஆறுமுகமான (முருகனின்) பெருமை, முருகனுடைய பன்னிரு கைகளின் பெருமை, வானவர்களின் தலைவன், பழமுதிர்ச்சோலையின் சிறப்பு, முருகனின் வழிபாடு, போன்றவற்றை இக்கட்டுரையின் வாயிலாகக் முருகனின் இறைநெறிக் கொள்கைகளைக் காண்போம்.

## முருகப்பெருமானின் அருள்

கடலின் நீண்ட பரப்பு மயிலாகவும், கதிரவன் முருகப்பெருமானாகவும், மயிலின் மீது அமர்ந்து பவனி வருவது போல் இருக்கின்றது. அவன் அடியவர்களைக் காக்கின்றவன். தன்னை

நாடி வரும் மக்களின் மன மாசுக்களைக் நீக்கும் தன்மை உடையவன். தன்னைத் தேடி வரும் அடியவர்களுக்கு தீமைகளை நீக்கி, நல் அருளினைத் தருபவன். பகைவர்களான அரக்கர்களை அழித்து மக்களைக் காக்கக்கூடியவன். முருகன் தன் ஆறுமுகங்களும், பன்னிரு கைகளும் மக்களினைக் காத்து, அவர்களுக்கு அருளினை வழங்கக் கூடியவன். ஓம் என்றும் பிரணவப் பொருள் உரைத்தவன் முருகப்பெருமான். "சரவணபவ" என்னும் ஆறெழுத்து மந்திரத்தை உடைய முருகப்பெருமான் அனைத்து உயிர்களுக்கும் அருள்பாலிக்கக்கூடியவன்.

## முருகப் பெருமானின் அழகு

தேர் உருளைப்போல அசைந்து ஆடும் வட்டவடிவிலான குளிர்ந்த கடம்பமலர்களைச் சூடிய அழகிய மார்பினை உடையவன். உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் விரும்பி வரவேற்க, மேருமலையைச் வலமாகச் சுற்றிப் கதிரவன் பரவ, நீலக்கடலிலே இளங்கதிர்ச் சோதி வடிவாக முருகப் பெருமான் அனைவரின் உள்ளத்துள்ளே ஒளிச்சுடராய் எழுந்தருளிகின்றான்.

"உலகம் வெப்ப வலன் ஏர்பு தரீதரு

பலர் புகழி ஞாயிறு கடல் கண்டாங்கு" (திருமுருகாற்றுப்படை: 1-2)

சிவந்த காந்தன் மலரை தலைமாலையாக அணிந்து திருமுடியும் கொண்டவன் முருகப்பெருமான் ஆவான். அவனுடைய வேள் கூறிய இலை போன்ற வடிவுடையது. யானை மீது ஏறி திருமுடி சூடி, பலவகைப்பட்ட மணிகள் மின்ன ஒளிவிசித் திகழக்கூடியவள் முருகப்பெருமான். காதில் மகரக் குழை அணிந்திருக்கக் கூடியவன் முருகப்பெருமான்.

"கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்

கால் கிளர்ந்து அன்ன வேழம் மேல்கொண்டு

ஐவேறு உருவின் செய்வினை முற்றிய

முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி" (திருமுருகாற்றுப்படை: 81-84)

அவருடைய அழகு தமிழ்மொழியின் வாயிலாக பல்வேறு நிலைகளில் வர்ணிக்கப்பட்டள்ளது. முருகன் என்றாலே அழகு என்றே பொருள்படும். முருகனின் அழகு அனைத்து அன்பர்கள், அடியவர்களின் மனத்திலும் அருளோடு விளங்கக்கூடியது.

## ஆறுமுகனின் பன்னிரு கைகள், திருமுகங்களின் சிறப்பு

அருள் ஒளிவீசித் திகழும் முருகப் பெருமான் தன்னுடைய ஆறு முகங்களினாலும் பன்னிரு கைகளினாலும் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிரினங்களின் நன்மைக்காகவும், பகைவர்களை அழித்து அனைத்து உயிரினங்களுக்கும் அருளக் கூடியவன். தன்னை நாடிவரும் அனைத்து அன்பர்களுக்கு, ஒவ்வொரு திருமுகமும் ஒவ்வொருவருக்கும் அருளக்கூடியது (Swaminatha Aiyar, 1950).

வேத விதிகளின்படி, வேதங்கள் ஓதும் அந்தணர்களுக்கு உதவும் ஒரு முகம். அன்பர்களுக்கு கருணை மழைபொழியும் இன்னொரு திருமுகம். கற்றவர்களின் மனத்தின் இருளைப் போக்கி அவர்களுக்கு அறிவொளித் தரும் ஒரு திருமுகம். பகைவர்களை அழித்து பக்தர்களை காக்கும் ஒருத் திருமுகம். மற்றொரு திருமுகமோ மலையில் வாழும் குறமகள் வள்ளியோடு வாழும் ஒரு திருமுகம் (Jakannatan, 1978).

"திங்கள் போலத் திசை விளக்குமே ஒரு முகம்

செறுநர்த் தேய்த்து செல்லுமம் முருக்கிக்

கருவுகொள் நெஞ்சலமாடு களம் வேட்டமன்றே ஒரு முகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்" (திருமுருகாற்றுப்படை: 98-100)

இவ்வாறு ஆறுமுகமான முருகப் பெருமானின் திருவருள் அமைந்து இருக்கின்றது. முருகனின் திருவருள் பக்தி இலக்கியத்தில் சிறந்து விளங்குகின்றது.

முருகனின் பன்னிருத் திருக்கரங்களால் வானத்துத் தேவர்களுக்கு திருவருள் கொடுத்து தேவர்களுக்குத் தலைவனாக தேவர்களுக்கு வரும் துன்பங்களை நீக்கி பகைவர்களை அழிக்கும் ஒருமுகம். திருமுருகப் பெருமானின் ஒருகரம் இருப்பில் ஊன்றி இருக்கிறது. தொடைமேல் வைத்தபடி உள்ளது. ஞான முத்திரை காட்டி ஒரு கையும், கேடயமும், வேலாயுதமும், அங்குசமும் தாங்கி இருக்கக்கூடியது மற்றுமொரு கைகள், செபமாலை தாங்கி இருக்கும் ஒருகை, நீல நிற வானம் அமுத மழைபொழிய அருளக்காட்டும் ஒருகை.

"ஐயிரு வட்டமொடு எஃகு வலம் திரிப்ப, ஒருகை

மார்பொடு விளங்க, ஒருகை

தாரொடு பொலிய, ஒருகை

கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை

பாடு இன் பன்மணி இரட்ட, ஒருகை" (திருமுருகாற்றுப்படை: 111-115)

இவ்வாறாக முருகப்பெருமானின் பன்னிரு திருக்கரங்களும் எல்லோர்க்கும் அருள் பாலிக்கின்றார். முருகப்பெருமானின் இறைநெறியானது திருமுருகாற்றுப்படையில் மக்கள் இலக்கியமான நாட்டுப்புறவியல் சார்ந்தே அமைகின்றது (Nachinarkiniyar, 1918).

சங்க இலக்கியங்களில் முருகப்பெருமானின் ஆயுதமான செவ்வேளையே வணங்கின் பின்னரே, செவ்வேள் முருகப்பெருமானோடு தொடர்புபடுத்தப்பட்டது. முருகப் பெருமானின் திருவளானது தன்னை நாடிவரும் அன்பர்களுக்கு பக்தர்களுக்கு தன்னுடைய அருளினை வழங்குபவர் சித்தர்கள் அனைவரும் முருகனின் அருளை பெற்று அவனையே நினைத்து வழிபடுவார்கள். தமிழ் நிலத்திற்கு உரிய தெய்வம் முருகப்பெருமான். முருகப் பெருமானின் ஆறு திருமுகமும், பன்னிரு கைகளும் சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

## ஞான நெறி

ஞானம் வேண்டி முருகப்பெருமானை வணங்குபவர்களுக்கு அவன் அவர்களுக்கு உரிய ஞானத்தை வழங்கக்கூடியவன். முருகப்பெருமான் கற்றறிந்த பெரியோர்களும் கண்டு உணர முடியாத ஞானத்தை உடையவன். ஞானவான்களுக்கு தலைமை ஏற்கத்தக்கத் தனிப் பண்பு உடையவன். முருகப்பெருமானிடம் ஞானம் வேண்டுபவர்கள் பிறரிடம் பகை வெறுப்பு காட்டாது, பெரியோர்களையும், தவசீலர்களையும் மதிக்கவேண்டும். இறைவனான முருகப்பெருமானின் திருவுள்ளம் மகிழ்ந்து ஞானம் வேண்டுபவர்களுக்கு ஞானநெறியினை வழங்கக்கூடியவன்.

"கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்

தாம்வரம்பு அகிய தலைமையர் காமமொடு

கடும் சினம் கடிந்த காட்சியம் இரும்பை" (திருமுருகாற்றுப்படை:133-135)

எனவே, சிவந்த செவ்வேளினை ஏந்திய வேலனான முருகனை நினைந்து வழிபடுவர்களுக்கு, ஞானம் கிடைக்க வேண்டுமென்றால், ஐம்புலன்களின் வழிச் செல்லும் ஆசையை அடக்கி,

செல்பவர்களுக்கு ஞானத்தினைக் கொடுக்கக்கூடியவன் முருகப்பெருமான் ஆவான்.

"எய்யா நல் இசைச் செவ்வேல் சேஎய்

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு

நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும்" (திருமுருகாற்றுப்படை: 61-63)

இவ்வாறு, முருகப்பெருமானிடம் சென்று ஞானத்தினை பெற வேண்டும். முருகப் பெருமானின் ஞான நெறி தருமச் சிந்தனை உடையதாக இருக்கின்றது. எவர் இடத்தில் எல்லாம் தருமச் சிந்தனை இருக்கின்றதோ, அவரிடத்தில் முருகப் பெருமானும் இருக்கின்றான்.

## மூவரும் போற்றும் தேவர்களின் தலைவன்

பிரம்மன், திருமால், சிவன் ஆகிய மூவரும் போற்றக் கூடியவன் முருகப்பெருமான். பிரம்மன் பிரணவப் பொருளின் அர்த்தம் தெரியமால் இருந்தபோது பிரம்மனை சிறையில் அடைத்து, தன் தகப்பனான சிவபெருமானுக்கு, பிரணவப் பொருளின் அர்த்தத்தினைக் கூறியவன் முருகப்பெருமான். சரவணப் பொய்கையிலை அக்னித் தேவன் கையில் ஏந்திய தீப்பொறிகள் ஆறாக, அவர்களை கார்த்திகைப் பெண்கள் அறுவர் பாலூட்டி வளர்ந்தனர். குறிஞ்சி நிலம் தோறும் இருக்கக்கூடியவன் முருகப்பெருமான் ஆவான்.

"ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி

நா இயல் மருங்கில் பூவிலப் பாடி

விரை உறு ரறுமலர் ஏத்திப் பெரிது உவந்து

ஏரகத்து உறைதலும் உரியன்" (திருமுருகாற்றுப்படை: 186-189)

இவ்வாறு ஆறெழுத்து மந்திரத்தினால் கூறி, மூவர் போற்றும் தேவர் தலைவன், கற்பில் சிறந்தவளான தெய்வயானையின் கணவன் குறமகளான வள்ளியின் கணவனும் அவனே.

## குன்றமெல்லாம் குடியிருப்பான் குமரன்

சிவந்த உடலினை உடையவன். சிவப்பு நிற ஆடை அணிந்தவன். அசோக மரத்தின் மலர்களைக் காதில் சூடியவன் இடுப்பில் கச்சு அணிந்தவனர். வெட்சி மாலை சூடி, வீரக்கழல் அணிந்தவன். மான்போலும் மருளும் பார்வை கொண்ட இளம் பெண்களுடன் குகன் என்று அழைக்கக்கூடிய குமரன் குன்றுதோறும் அமர்ந்திருப்பவன்.

"மென்தோள் பல்பினை தழீஇத் தலைத் தந்து

குன்றுகோறாடலும் நின்றதன் பண்மே!" (திருமுருகாற்றுப்படை: 216-217)

குமரன் குறிஞ்சிப் பண்பாடியும், குறவர்குலப் பெண்கள் தொண்டகப் பறை இசைக்க, ஆடியும் இருப்பான். முருகப்பெருமானின் குமரன், குகன், கந்தன், கடம்பன், வேலவன், கார்த்திகேயன் என்றெல்லாம் அழைப்பர். வள்ளி, தெய்வயானையின் மணாளனாக இருப்பவர்.

சூரன், பதுமன் ஆகியோரைக் கொன்று அவர்களுக்கு முக்தி கொடுத்தவன். கிரவுஞ்ச மலையைப் பிளந்து சூரனைக் கொன்றவன் முருகப்பெருமான் ஆவான். மதுரையை சுற்றியுள்ள மலைகளில் எல்லாம். "பகைவரை வென்றழிக்குக் வீரவேலேந்திய, வேலவன் சேவல் கொடி நீடு வாழ்க" என்று வாழ்த்திப்பாடும்போது பக்க மலையெல்லாம் மோதி எதிரொலிக்கும்.

"கோழி ஓங்கிய வென்றரு விறற்கொடி

வாழிய பெரிது என்று ஏத்திப் பலருடன்

சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி" (திருமுருகாற்றுப்படை: 38-40)

மதுரையைச் சுற்றியுள்ள எட்டு மலைகளுக்குள்ளும் முருகனைப் பற்றிப் பாடும் துதி எதிரொலிக்கும்.

## முடிவுரை

வேலவனான முருகன் தரும வழியில் நடப்பவன் அவனை நாம் வணங்கி முக்தி அடையவேண்டும் என்றால் நாமும் தரும வழியினையேப் பின்பற்றவேண்டும். பிறருக்குத் தீங்கு செய்வது கூடாது, தன்னை யாசித்து வருபவர்களுக்கு அன்னம் இடவேண்டும். முருகப்பெருமானின் ஞானநெறி இவ்வாறே அமைகிறது. இதனையே "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார்" பசிப்பிணிப் போக்க வேண்டும் என்று கூறுகின்றார். அறவழியினைப் பின்பற்றி தமிழ்க்கடவுளான முருகன் கூறும் தரும வழியில் நடந்து முக்தி அடைவோம்.

## References


Jakannatan, Ki. Va., (1978) Tirumurukāṟṟuppaṭai viḷakkam, Amuta nilaiyam Pvt. ltd, India.

Nachinarkiniyar, (1918) Pattuppāṭṭu mūlamum, Commerical Press, Chennai, India.

Swaminatha Aiyar, U.V., (1950) Pattuppattu with a commentary by Naccinarkkiniyar (4th Edition). UV Swaminathaiyer Library, Chennai, India.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License